III ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT,
THIRUVALLUR AT POONAMALLEE.
O.S.02/2012

Deposition of witness for the Defendant/DW2
solemnly by Thiru.M.Muthupandi, Junior Assistant,
in accordance with the provision of Act I for 1873 on 02-03-2026

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : பிலால் அகமது | Village | : |
| Father's / Husband's Name | : இக்பால் | Calling | : |
| Age | : | Taluk | : |

**<u>1 ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

(சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டு 1 ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி செய்ய அனுமதிக்கப்படுகின்றார்.)

வழக்கு சொத்து 7085 சதுரடி பரப்பளவு உள்ளது. அந்த இடத்தில் தோரயமாக 4, 5 கடைகள் இருக்கும் 7, 8 குடித்தனங்கள் இருந்தார்கள். அங்கு என்னென்ன கடைகள் இருந்தது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் ஒரு பேரிங்கடை, ஒரு குடவுன், ஒரு ஹார்டுவேர் கடை, மற்றொன்று பூட்டி கிடந்தது. வீடுகளில் ஆட்கள் குடியிருந்து வந்தார்கள். முதல் மற்றும் 2 வது பிரதிவாதி அங்கு தான் இருந்தார்களா என்றால் ஜான்வெஸ்லி அங்கு தான் இருந்தார். கிரிஸ்டிபெல் அவரது கணவர் வீட்டிலிருந்து அவ்வபோது அங்கு வந்துசெல்வார். எனக்கு கொடுத்த பவர் பத்திரத்தில் தாவா சொத்தை வழிகாட்டி மதிப்பை விட 10 மடங்கு குறைவாகவும், சந்தை மதிப்பை விட 15 மடங்கு குறைவாகவும் விற்பனை செய்ய அதிகாரம் கொடுத்தார்களா என்றால் இல்லை விற்பதற்கு மட்டும் தான் அதிகாரம் கொடுத்தார்கள். அதேபோல் எனக்கு கொடுத்த பொது அதிகார பத்திரத்தில் 3 வருடம் வரை கால அவகாசம் எடுத்து விற்கலாம் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான் விற்றுகொடுக்கும்படி சொல்லியிருந்தார்கள். தாவா சொத்தின் அரசாங்க வழிகாட்டி மதிப்பீடு எவ்வளவு என்றால் அது எனக்கு ஞாபகம் இல்லை. அந்த இடத்தில் சந்தை மதிப்பு அந்த காலகட்டத்தில் எவ்வளவு இருந்தது என்று என்னால் சொல்லமுடியாது. சொல்லமுடியாது என்பதற்கு என்ன பொருள் என்றால் ஞாபகம் இல்லை என்று பொருள். எனக்கும் வாதி மனோவாவிற்கும் இடையே எவ்வளவு நாட்களாக பழக்கம் என்றால் முதல் அக்ரிமெண்ட் போடுவதற்கு ஒரு மாத காலம் முன்பாக பழக்கம். அது என்ன காலம்

என்று சொல்லமுடியுமா என்றால் அது பிப்ரவரி மாதம் 2011. தற்பொழுதும் எனக்கு வாதிக்கும் இடையே நல்ல உறவு முறைதானா என்றால் கேஸ் விசயமாக பேசிக்கொள்வோம். அவர் சொல்லி தான் நான் 3 ஆம் பிரதிவாதியாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் அப்படி கிடையாது. எனக்கும் 4 ஆம் பிரதிவாதி துரைராஜ்க்கும் இடையே எவ்வளவு நாட்களாக பழக்கம் என்றால் 08.04.2011 அன்று தான் முதன்முதலாக துரைராஜை பார்த்தேன். முதன்முதலாக 08.04.2011 அன்று தான் முதன்முதலாக துரைராஜை பார்த்தேன் என்று என்னுடைய பிரமான வாக்குமூலத்தில் சொல்லியிருக்கின்றேனா என்றால் சொல்லவில்லை. எனக்கும் 4 வது பிரதிவாதிக்கும் இடையில் ஜனவரி மாதம் 2011 லிருந்து பழக்கம் என்றால் சரியல்ல. நான் வழக்கிற்காக இவ்வாறு பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக எனக்கு 4 ஆம் பிரதிவாதி மற்றும் வாதிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினாரா என்றால் ஆமாம் அனுப்பினார். அந்த அறிவிப்பு 09.05.2011 தேதியிட்ட அறிவிப்பு என்றால் சரிதான். 18.05.2011 தேதியன்று எனது தரப்பில் ஒரு பதில் அறிவிப்பு என்னுடைய அறிவுறுத்தலின் படி அனுப்பப்பட்டதா என்றால் இல்லை. என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் நான் எந்த பதில் அறிவிப்பும் அனுப்பவில்லை என்று சொல்லவில்லை என்றால் சரிதான். என்னுடைய அறிவுறுத்தலின் பேரில் தான் என்னுடைய வழக்கறிஞர் இவ்வழக்கு கோப்பில் இருக்கின்ற எதிர்வழக்குரை, மற்றும் கூடுதல் எதிர்வழக்குரை ஆகியவற்றை தாக்கல் செய்தார்கள் என்றும் ஆனால் வாதியுடன் சேர்ந்துகொண்டு நான் தற்பொழுது எதிர்வழக்குரை, மற்றும் கூடுதல் எதிர்வழக்குரை ஆகியவற்றை நான் சொல்லி தாக்கல் செய்யவில்லை என்று பொய்யாக கூறுகின்றேன் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படுகின்ற எதிர்வழக்குரை, மற்றும் கூடுதல் எதிர்வழக்குரை ஆகியவற்றில் உள்ள கையெழுத்துக்கள் என்னுடையது தான். நான் தாக்கல் செய்திருக்கின்ற எதிர்வழக்குரை, மற்றும் கூடுதல் எதிர்வழக்குரை ஆகியவற்றில் மனோவா என்னை ஏமாற்றி கிரைய ஒப்பந்தம் செய்து கொண்டார் என்று கண்டுள்ளதால் தற்பொழுது நான் வாதியுடன் சேர்ந்து கொண்டு சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற திட்டத்துடன் மாற்றி சொல்கின்றேன் என்று சொன்னால் அதனை நான் மறுக்கிறேன். வினோத் என்ற வழக்கறிஞரை நான் தான் அமர்த்தினேன் என்றாலும் அவரை வைத்து தான் பதில் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் அதனை நான் மறுக்கின்றேன். அதன்பின்பு நானே வழக்கறிஞரை அமர்த்தி என்னுடைய அறிவுறுத்தலின் பேரில் தான் எதிர்வழக்குரை

மற்றும் கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டது என்றால் துரைராஜே வக்கீல் அமர்த்தி அவரே டிராப்ட் செய்து என்னிடம் கையெழுத்து மட்டும் வாங்கினார்கள். 2018 லிருந்து 2025 வரை நான் தாக்கல் செய்திருக்கின்ற எதிர்வழக்குரை, மற்றும் கூடுதல் எதிர்வழக்குரை ஆகியவற்றில் உள்ள சங்கதிகள் அனைத்தும் நான் சொல்லவில்லை அதனால் அதனை நீக்க வேண்டும் என்று மனு எதுவும் இதுவரை தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. நான் தாக்கல் செய்திருக்கின்ற நிரூபண வாக்குமூலத்தில் நான் அனுப்பிய பதில் அறிப்பு, எதிர்வழக்குரை, மற்றும் கூடுதல் எதிர்வழக்குரை ஆகியவற்றில் உள்ள விவரங்கள் எல்லாம் பொய்யானவை என்று சொல்லவில்லை என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படுகின்ற வா.த.சா.ஆ.2 கிரைய ஒப்பந்தத்தில் ரோடு விரிவாக்கத்திற்காக தான் 2 ½ கோடி பெருமானமுள்ள சொத்து 20 லட்ச ரூபாய்க்கு கொடுக்கின்றோம் என்று எதாவது குறிப்பு இருக்கின்றதா என்றால் இல்லை. வா.த.சா.ஆ.2 கிரைய ஒப்பந்தத்தில் 7085 சதுரடி பரப்புள்ள காலியிடம் என்று தான் சொத்து விவரத்தில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். ரோடு விரிவாக்கத்திற்காக அரசாங்கத்திடமிருந்து ஏதாவது அறிவிப்பு வந்திருக்கின்றதா என்றால் பேப்பர் விளம்பரம் வந்தது. அந்த பேப்பர் விளம்பரத்தை என்னால் தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும். அதனை அடுத்தமுறை வாய்தாவிற்கு வரும்பொழுது கொண்டுவர முடியுமா என்றால் முடியும். அந்த பேப்பர் விளம்பரத்தில் தாவா சொத்தில் எவ்வளவு இடம் எடுப்பதாக காணப்பட்டது என்றால் அது எனக்கு exact ஆக தெரியவில்லை. இந்த விவரம் எல்லாம் தெரியாமல் தான் சந்தை மதிப்பை விட 15 மடங்கு குறைவாக வாதியுடன் ஒப்பந்தம் போட்டிருக்கின்றேன் என்றால் சரிதான். வாதியுடன் ஒப்பந்தம் மேற்கொண்டபோது அட்வான்சாக ரூ.75 ஆயிரம் வாங்கினேன். இந்த தொகையை ரொக்கமாக வாங்கினேன். இந்த 75 ஆயிரம் பணத்தை வாங்கி ஜான்வெஸ்லியிடம் கொடுத்தேன். அவ்வாறு பணம் கொடுத்த விபரத்தை காட்டக்கூடிய ஆவணத்தை நான் இவ்வழக்கில் தாக்கல் செய்திருக்கின்றேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. நான் 75 ஆயிரம் ரூபாய் பணத்தை வாங்கவில்லை என்றாலும் அதனை வாதிக்கு கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. இது தவிர வாதி எனக்கு வேறு ஏதாவது பணம் கொடுத்திருக்கின்றாரா என்றால் கொடுத்திருக்கின்றார்.

(அறிவார்ந்த 1ஆம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது).